# சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.
## O.S.No. 751/2022

**வா.சா.1. ஈஸ்வரி** 18.11.2022

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

வா.சா.ஆ.4, 5 ஆவணங்களின் வழிகாட்டுதல் மதிப்பு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் பத்திரத்திலேயே அது குறிப்பிடப்பட்டுள்ளது . பத்திரத்தில் இருக்கும் மதிப்புதான் அந்த சொத்தின் அரசு வழிகாட்டுதல் மதிப்பு என்றால் சரிதான். அந்த பத்திரங்களில் உள்ள கிரையத்தொகையும் அதே தொகைதான் . வா.சா.ஆ.4, 5 கிரையத்தின் மூலம் கிடைத்த தொகையை எனது மகன் எனது வங்கிக்கணக்கில் செலுத்தியதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல , தாக்கல் செய்துள்ளேன் . விற்பனையில் கிடைத்த தொகையைத்தான் எனது வங்கிக்கணக்கில் செலுத்தியதற்கு என்ன ஆதாரம் உள்ளது என்றால் இரண்டாவது கிரையத்தேதியிலேயே எனது வங்கிக்கணக்கில் கிரையத்தொகை செலுத்தப்பட்டுள்ளது. நான் சொல்வதுபோல் இல்லை என்றும், கிரையம் செய்தது வேற தேதி, பணம் செலுத்தப்பட்ட தேதி வேறு தேதி என்றால் சரியல்ல , இரண்டாவது கிரையம் செய்த தேதியில் எனது வங்கிக்கணக்கில் பணம் செலுத்தப்பட்டது . எனது மகனுக்கு எத்தனை வங்கியில் கணக்கு உள்ளது என்றால் ஒரே வங்கியில் மட்டுமே அவருக்கு கணக்கு உள்ளது. எனது மகனுக்கு வங்கிக்கணக்கு இருந்தது என்றும் , கிரையத்தொகையின் மூலம் கிடைத்த தொகையாக அது இருந்தால் அவரது வங்கிக்கணக்கில் செலுத்தியிருப்பார் என்றும் , அவ்வாறு அந்த பணம் கிரையத்தொகை மூலம் கிடைத்த தொகை அல்ல என்று சொன்னால் சரியல்ல , எனது மகன் இளம்வயதில் இருந்ததால் அவர் பணத்தை எடுத்து செலவு செய்துவிடுவார் என்பதால் எனது வங்கிக்கணக்கில் செலுத்த சொன்னேன் . எனது மகன் இளம்வயது என்றும், அவர் பணத்தை விரயம் செய்துவிடுவார் என்றும் , அதனால் எங்களது வங்கிக்கணக்கில் செலுத்த சொல்லி எனது வங்கிக்கணக்கில் செலுத்தப்பட்டது என்ற விபரத்தை நான் எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். கருப்புச்சாமியிடமிருந்து எனது மகன் கிரையம் வாங்கிய சொத்து அவரின் தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல , அது நான் வங்கியிலிருந்து பணம் எடுத்து கொடுத்துதான் கிரையம் பெறப்பட்டது . என்னிடம் காட்டப்படும் வா .சா.ஆ.6 பத்திரம்தான் எனது மகன் கருப்புச்சாமியிடமிருந்து கிரையம் பெறப்பட்ட சொத்து என்றால் சரிதான் . வா.சா.ஆ.6 பத்திரத்தில் எனது வங்கிக்கணக்கிலிருந்து பணம் எடுத்துக்கொடுத்துதான் கிரையம் பெறப்பட்டதாக குறிப்பிடவில்லை

என்றால் சரிதான். வா.சா.ஆ.6 கிரையப்பத்திரத்திலுள்ள சொத்து எனது மகனின் சொந்த தொகையை கொண்டு கிரையம் பெறப்பட்டது என்றும , அந்த கிரையத்திற்கு நான் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றும், நான் வழக்கிற்காக பணம் கொடுத்தேன் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4, 5 கண்ட சொத்துக்களின் மதிப்பை விட வா.சா.ஆ.7, 8 ஆவணங்களில் எனது மகன் கிரையம் பெறப்பட்ட சொத்துக்களின் மதிப்பு குறைவு என்றால் சரிதான் . எனது மகன் வா.சா.ஆ.4, 5 கிரையப்பத்திரங்களின் மூலம் கிரையம் செய்த தொகையை கொண்டுதான் வா .சா.ஆ.6, 7, 8 ஆகிய ஆவணங்களில் கண்ட சொத்துக்களை வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. மைனர் வாதிகள் , 3 ஆம் பிரதிவாதியின் சொத்திலிருந்து பங்கு கேட்கிறார்களா? தாத்தா துரைச்சாமியின் சொத்திலிருந்து பங்கு கேட்கிறார்களா? என்றால் அவர்களது தகப்பனாரின் சொத்திலிருந்துதான் பங்கு கேட்கிறார்கள். துரைச்சாமி, 3 ஆம் பிரதிவாதியான அவரது மகனுக்கு எழுதிக்கொடுத்த சொத்து தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல , பூர்வீக சொத்து. 3 ஆம் பிரதிவாதி பாகப்பிரிவினையில் கிடைத்த சொத்து அவரது பூர்வீக சொத்து என்றும் , துரைச்சாமி, விடுதலைப்பத்திரத்தின் மூலம் எழுதிக்கொடுத்த சொத்து 3 ஆம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல . இந்த வழக்கில் எந்தெந்த சொத்துக்களை சேர்த்துள்ளேன் என்றால் கருப்புச்சாமியிடம் வாங்கிய சொத்து , பழனிச்சாமி மற்றும் சந்திரசேகரனிடம் வாங்கிய சொத்து , 3 ஆம் பிரதிவாதி பரிவர்த்தனை மூலம் பெற்ற சொத்து ஆகிய சொத்துக்களின்பேரில்தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கருப்புச்சாமியிடமிருந்து எனது மகன் கிரையம் பெற்றது 861 சதுரடி இடம் என்றால் சரிதான் . வா.சா.ஆ.10, 11 ஆகிய ஆவணங்களின் மூலம் 1, 2 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற சொத்துக்களைத்தான் இந்த வழக்கில் தாவாவில் சேர்த்துள்ளேன் என்றும் , இதர சொத்துக்களை தாவாவில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. எனது மகனின் மொத்த பூர்வீக சொத்தையும் வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். (சாட்சி தற்போது மாற்றி சரியல்ல என்று சாட்சியமளிக்கிறார் ). எனது மகனிடம் மீதமுள்ள சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்திருக்கிறனோ என்றால் மீதி சொத்துக்கள் இல்லை , தாவா சொத்துக்கள் குறித்துதான் பாகப்பிரிவினை கோரியுள்ளேன் . தாவா சொத்து 3 ஆம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட சொத்து என்றும், அதில் வாதிகள் எந்தவிதமான பங்குரிமையும் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல . 1,2 பிரதிவாதிகளுக்கு எனது மகன் கிரையம் செய்துகொடுக்கும்போது நான் பக்கத்தில்தான்இருந்தேன என்றால் சரியல்ல. கிரையம் எழுதியபின்பு 3 மாதம் கழித்து எனது மகன் கிரையம் செய்தது தெரிய வந்தது . கிரையம்

செய்த விபரம் 3 மாதத்தில் விபரம் தெரிந்த நான் 4 1/2 வருடம் கழித்து வழக்கு தாக்கல் செய்த காரணம் என்னவென்றால் கிரையம் பெற்ற நபர்கள் கிரையத்தொகையை கொடுப்பதாக சொல்லி காலம் தாழ்த்தி வந்து கொடுக்காததால் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் . கிரையம் பெற்ற நபர்கள் கிரையத்தொகை கொடுக்காதது சம்பந்தமாக நானோ, எனது மகனோ காவல்துறையில் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11 ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள கிரையத்தொகையை எனது மகன் பெற்றுக்கொண்டார் என்றும் , அந்த விபரம் எனக்கும் தெரியும் என்றும், வழக்கிற்காக கிரையம் பெற்ற நபர்கள் கிரையத்தொகையை செலுத்தவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7, 8 கிரையப்பத்திரங்களில் எனது மகன் பூர்வீக சொத்திலிருந்து வந்த வருமானத்தை கொண்டு அந்த கிரையம் வாங்கப்பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் எனது வங்கிக்கணக்கிலிருந்துதான் மேற்படி கிரையங்களுக்கு நான் பணம் கொடுத்துள்ளேன். அதுபோன்று நான் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல . இந்த வழக்கை தயார் செய்வதற்கு நானும் , எனது மகனும் சேர்ந்துதான் வழக்கறிஞரை பார்த்தோம் என்றால் சரியல்ல, நான் மட்டும்தான் சந்தித்து விபரம் சொன்னேன். எனது மகனின் தூண்டுதலின்பேரில்தான் நான் வாதிகளை வைத்து இந்த 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தண்ணீர் கேன் போடும் தொழில் செய்து வந்தேன் என்றால் சரியல்ல . அதில் வருடத்திற்கு ரூ 10 லட்சத்திற்கு மேல் வருமானம் வரும் என்றால் சரியல்ல, குறைவாகத்தான் வந்தது. நான் வருமானவரி எதுவும் செலுத்தினேனா என்றால் இல்லை . எனது வங்கிக்கணக்கிலிருந்த பணம் எனது தொழில் மூலமாக வந்தது என்றும், எனது மகன் கிரையம் பெற்ற கிரையத்தின் மூலம் செலுத்தப்பட்டதல்ல என்று சொன்னால் சரியல்ல, நான் குடிநீர் கேன் வியாபாரம் செய்தது 2013 ஆம் ஆண்டு, ஆனால் எனது கணக்கில் பணம் செலுத்திய ஆண்டு 2008 ஆம் ஆண்டு ஆகும். 2008 ஆம் ஆண்டு 9 வது மாதம் 18 தேதி முதல் 29 வரை ரூ.14 லட்சம் எனது கணக்கில் சேர்ந்துள்ளது என்றால் சரிதான் , அது மருமகன் எனது கணக்கில் செலுத்திய பணம். எனது வங்கிக்கணக்கிலிருந்த பணம் அனைத்தும் தொழில் மூலம் கிடைத்த பணம் என்றும், அதற்கும், 3 ஆம் பிரதிவாதிக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல . வா.சா.ஆ.12 ஆன எனது சேமிப்பு கணக்கு புத்தகமே என்னிடம் அதிக பணபுழக்கம் இருந்ததை காட்டுகிறது என்றும் , வழக்கிற்காக பொய்யாக 3 ஆம் பிரதிவாதி எனது கணக்கில் பணம் செலுத்தியதாக பொய்யாக

சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10, 11 –கிரைய ஆவணங்களின் மூலம் 1, 2 பிரதிவாதிகள் தகுந்த மறுபயனை செலுத்தி 3 ஆம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்று தெரிந்துதான் கிரையம் பெற்றார்கள் என்றும், அந்த ஆவணங்களை ஆட்சேபனை செய்வதற்கு வாதிகளுக்கு உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல . வழக்கிற்காக எனக்கு வருமானமே இல்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 11 ஆவணத்தில் 3 ஆம் பிரதிவாதிக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்து என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான் . எனது மகனுக்கு நிறைய கடன்கள் உள்ளது என்றால் சரிதான் . அவரது மனைவியையும், குழந்தைகளையும் அவர்தான் பராமரித்து வருகிறார் என்றால் சரியல்ல , அவரது மனைவியின் வருமானத்தை கொண்டு குழந்தைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது . 3 ஆம் பிரதிவாதியின் மனைவிக்கு எந்தவிதமான வருமானமும் இல்லை என்றும் , 1, 2 பிரதிவாதிகளிடம் பெற்ற கிரையத்தொகையை வைத்துதான் அவர் கடன்களை எல்லாம் அடைத்தார் என்றால் சரியல்ல. அதனால்தான் 2 ஆம் பிரதிவாதிக்கு கிரையம் செய்தபோதே குடும்ப செலவிற்காகவும் , சில்லரை கடன்களை தீர்ப்பதற்காகவும் என குறிப்பிட்டு கிரையம் செய்துள்ளார் என்றால் அவ்வாறு வாசகம் குறிப்பிடப்பட்டுள்ளது உண்மை , ஆனால் அவ்வாறு கடன்களையும், குடும்ப செலவிற்கும் பணம் கொடுக்கவில்லை. வா.சா.ஆ.7 கிரையம் பெற்ற சொத்தைதான் 3 ஆம் பிரதிவாதி 1 ஆம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றும், அது அவருடைய தனிப்பட்ட சொத்து என்றும் , அது வாதிகளுக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல . 1 ஆம் பிரதிவாதி எனது மகனிடம் பூர்வீக சொத்தை எதுவும் கிரையம் பெறவில்லை என்றும் , 3 ஆம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்தைதான் கிரையம் வாங்கினார்கள் என்றும் , அதனால் வாதிகளுக்கு எந்தவிதமான உரிமையும் அந்த சொத்தில் இல்லை என்றால் சரியல்ல . 2 ஆம் வாதி 2017 ஆம் ஆண்டுதான் பிறந்துள்ளார் என்றால் சரிதான் . 2017–இல் பிறந்த 2 ஆம் வாதி 2014–இல் கிரையம் செய்த சொத்தை கேள்வி கேட்க முடியாது என்றால் சரியல்ல . 1,2 பிரதிவாதிகள் 3 ஆம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்தைதான் கிரையம் பெற்றார்கள் என்றும் , அதை பொறுத்து வாதிகளுக்கு எந்தவிதமான உரிமையோ, பாத்தியமோ கிடையாது என்று சொன்னால் சரியல்ல , எனவே தாவாவில் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

M DHANABAL
Digitally signed by M DHANABAL
Date: 2022.11.19 11:58:18 +0530

சார்பு நீதிபதி,
ஒட்டன்சத்திரம்.